# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 01.05.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

கடந்த குத்பாவில் நான் இறைவனின் அன்னாஃபி – பயன் தருபவன் என்ற பண்புப் பெயரைப் பற்றி கூறினேன். உண்மையிலேயே பயன் தருபவன் அல்லாஹ் ஒருவனே ஆவான். எனவே அல்லாஹ் என்னை மட்டும் வணங்குங்கள் என்று கட்டளை இடுகிறான். அவனை வணங்கினால் இவ்வுலகிலும் மறுவுலகிலும் அவனது அருட்கொடைகளுக்கு வாரிசாவீர்கள். வணங்குவதோடு இறைவன் செய்யச் சொன்ன அனைத்து கட்டளைகளையும் பேணுங்கள். எல்லா விதமான பயனும் தருவது நான் தான். எனவே என்னை மட்டும் வணங்குங்கள் என்று மட்டும் அல்லாஹ் கூறவில்லை. மாறாக, அண்டசராசரங்களையும் அதில் காணப்படுகின்ற ஒவ்வொரு பொருளையும் நான்தான் படைத்துள்ளேன். எனது கட்டளையினால்தான் இந்தப் பொருட்களெல்லாம் சில நேரம் பயனையும் சில நேரம் தீங்கையும் தருகிறது. உங்கள் வாழ்க்கைக்கு தேவையான அனைத்தையும் படைத்தவன் நான்தான் என்று அல்லாஹ் கூறுகிறான். நான் ரப்புல் ஆலமீன் ஆவேன். எனவே வேறு எங்கிருந்தும் பலன் பெறலாம் என்ற கேள்விக்கே இடமில்லை.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்தக் கருத்தை விளக்கியவாறு ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

இறைவனின் ருபூபிய்யத், அதாவது படைத்து முழுமையாக வளர்ப்பது என்பது முழு உலகில் எல்லாப் பொருட்களின் மீதும் நடந்து கொண்டிருக்கிறது. படைப்பினங்கள் எதுவரை வேண்டுமோ அதுவரை அவைகளை வளர்க்கிறான். இயற்கை தோன்றிய பிறகு ஒவ்வொரு நாளும் புதிய வடிவில் தனது தோற்றத்தை வெளிப்படுத்துகிறது. மனிதனின் இயல்பில் அல்லாஹ் ஆராய்ச்சி செய்கின்ற பழக்கத்தை வைத்துள்ளான். முழு உலகிலும் ஆராய்ச்சி செய்வதால் புதிய புதிய தோற்றத்தை அல்லாஹ் மனிதனுக்கு காட்டுகிறான். பலவகையான உலகம் இருக்கின்றது. இதில் வானம் ஒரு தனி அமைப்பாகும். இதில் பல வகையான கோள்களும் நட்சத்திரங்களும் அடங்கும். இதில் பூமியும் ஒரு தனி உலகமாகும். பூமிக்கு அடியிலும் ஒரு தனி உலகம் காணப்படுகிறது. அதில் விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து வியக்கத்தக்க பல விஷயங்களை நமக்கு தெரிவிக்கின்றார்கள். பிறகு தாவரங்கள் இருக்கின்றன. இது ஒரு தனி உலகமாகும். செடிகள், கொடிகள், பூ வகைகள் காய் கனி வகைகள் அடங்கிய ஒரு தனி உலகமாகும். இவ்வாறு இன்னும் பல எண்ணற்ற வகைகள் உள்ளன. ஒவ்வொரு வகையிலும் இறை படைப்பின் ஒரு தனி புதுமை நமக்கு தென்படுகிறது. தாவரங்களில் உணவு மட்டுமின்றி பல மருந்து வகைகளும் இருக்கின்றது. ஆராய்ச்சிகளுக்கும் பிறகு மனித அறிவுக்கும் சில செடி கொடிகளின் பலன் தெரிய வந்துள்ளது. ஆனால் இன்னும் பலவற்றின் மீதும் ஆராய்ச்சி செய்யப்பட வேண்டும்.

பிறகு புழு பூச்சிகள் உள்ளன. இது ஒரு தனி உலகமாகும். இவ்வாறு பல பொருட்களை இந்த உலகில் அல்லாஹ் படைத்துள்ளான். ஒவ்வொரு படைப்பிலும் ஒரு நோக்கமும் குறிக்கோளும் இருக்கிறது. அதை அந்த படைப்பினம் முழுமைப்படுத்துகிறது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவனின் ருபூபிய்யத் (படைத்துக் காத்தோம்பும் பண்பு) முழு உலகின் எல்லா உயிரினம் மற்றும் உயிரற்றதின் மீது பொதுவாக இருப்பதன் காரணமாக அது ஃபைஸானேஆம் – பொதுவான அருட்கொடை என்று அழைக்கப்படுகிறது. அதாவது இறைவனின் ருபூபிய்யத் எல்லா தாவரங்களின் மீதும், எல்லா விலங்குகளின் மீதும், எல்லா மனிதர்களின் மீதும், எல்லா உயிரற்றப் பொருட்களின் மீதும் இருக்கிறது. இதை

பொதுவான அருள் என்று கூறுவர். அதாவது தனது அருளை அல்லாஹ் எல்லாவற்றிற்கும் பொதுவாக ஆக்கி விட்டான். ஏனென்றால் இருக்கின்ற எல்லா பொருளும் அதிலிருந்து பலனடைகிறது. அந்த அருளின் மூலம்தான் எல்லாம் நிலைபெற்றிருக்கிறது. உலகத்தில் காணப்படுகின்ற எல்லாப் பொருட்களும் இறைவனிடமிருந்து அருளைப் பெறுகிறது. இறைவன் இருப்பதால் தான் ஒவ்வொரு பொருளும் படைக்கப்படுகிறது. அவனிடமிருந்து அருளைப் பெறுகிறது. உலகில் காணப்படுகின்ற எல்லாப் பொருள்களும் இறைவனின் இருப்பிலிருந்து பலன் பெறுகின்றன என்றாலும் இஹ்ஸான் என்ற அடிப்படையில் மிக அதிகமான பலன் மனிதனுக்கே கிடைக்கிறது. ஏனென்றால், இறைவனின் அனைத்துப் படைப்பினங்களிலிருந்தும் மனிதன் பலன் பெறுகின்றான். எனவே உங்களது இறைவன் ரப்புல் ஆலமீன் ஆவான் என்று கவனமூட்டப்படுகிறது. மனிதனின் நம்பிக்கை வலுப்பெறவும், நமது பலனுக்காக இறைவனின் படைப்பு மிகவும் விசாலமானது. அவன் பல்வேறு வகையான காரணிகளை படைக்கும் சக்திவாய்ந்தவன் என்று மனிதன் உறுதிக் கொள்ள வேண்டும். எனவே இவ்வுலகில் மனிதனுக்கு தெரிந்தும் தெரியாமலும் காணப்படுகின்ற எல்லாப் பொருட்களும் இறைவனால் படைக்கப்பட்டதாகும்.

இறைவன் படைத்த ஒவ்வொரு பொருளையும் அஷ்ரஃபுல் மக்லுகாத் – படைப்பினங்களிலேயே மிகவும் சிறந்த படைப்பினமாகிய மனிதனுக்கு அதை பயனுள்ளதாக்கி மனிதனின் மீது இறைவன் மாபெரும் அருள்புரிந்திருக்கிறான். உலகம் ஆராய்ச்சி உதவியோடு புதிய புதிய விஷயங்களை கண்டுபிடித்துக் கொண்டே செல்லச் செல்ல அதில் மனிதனுக்கு பலனும் அதிகமாகிக் கொண்டே செல்கிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவனின் அனைத்துப் படைப்பினங்களையும் பற்றி எடுத்துக்கூறியுள்ளார்கள். மனிதனின் பலனுக்காக இந்த அளவு பலனுள்ள பொருட்களை இறைவன் படைத்து மனிதனுக்கு தொண்டாற்றுமாறு பணித்துள்ளான். இது இறைவனை நினைவு கூர்வதற்கு காரணமாக அமைய வேண்டும். மனிதனின் பயனுக்காக மனிதன் மீது கருணை காட்டி இவைகளை படைத்த இறைவனுக்கு வரும் காலங்களிலும் மனிதனுடைய தேவைகள் அதிகரிக்கின்றபோது அவனுக்கு பயன்தர இன்னும் பல பொருட்களை படைக்க வலிமை இருக்கிறது. ரப்புல் ஆலமீனாகிய இறைவன் மனிதன் மீது இந்த அளவுக்கு அதிகமான அன்பையும், கருணையையும் காட்டியுள்ளான் என்றால் மனிதன் அந்த கருணையான இறைவனுக்கு எந்த அளவுக்கு அதிக நன்றி உணர்வோடு விளங்க வேண்டும். அதோடு அவனது அனைத்து கட்டளைகளையும் பேணி நடக்க வேண்டும். ஷிர்க்கிலிருந்து தன்னை முற்றிலும் தூய்மையாக வைத்தவாறு அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெற முயற்சி செய்ய வேண்டும்.

உங்களது பலனுக்காகவும், தேவைக்காகவும் நான் எண்ணற்றப் பொருட்களை படைத்துள்ளேன் என்று அல்லாஹ் திருக்குர்ஆனின் பல்வேறு இடத்தில் குறிப்பிடுகின்றான். இந்தப் பொருட்களை எல்லாம் நீங்கள் பயன்படுத்தும்போது இவைகளைப் படைத்தது நான்தான் என்பதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இதை படைத்தது மட்டுமல்ல. மாறாக, இதன் கட்டுப்பாடும் இறைவனது கையில்தான் இருக்கிறது. ரப்புல் ஆலமீனாகிய இறைவன், ரஹ்மான் ஆவான். அவன் ரஹீம் ஆவான். அவன் தனது ரஹ்மானிய்யத் மூலம் மக்களுக்கு அருள்புரிகிறான். ரஹீமிய்யத் மூலம் உழைப்பவர்களுக்கு கூலி வழங்குகிறான். இவ்வாறான இறைவனை விட்டு விட்டு வேறு இறைவனைத் தேடுவது முட்டாள்தனமாகும்.

ஆக இவ்வாறான இறைவன் தான் வணக்கத்திற்கு தகுதியுடையவன் ஆவான். அவன் ரப் ஆவான். ரஹ்மான் ஆவான். ரஹீம் ஆவான். இன்னும் எண்ணற்ற நற்பண்புகள் உடையவன் ஆவான்.

**திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்:**

அதன் பொருள்: வானங்களையும், பூமியையும் படைத்ததிலும், இரவு, பகல் மாறி மாறி வருவதிலும், மக்களுக்குப் பயனளிப்பவற்றுடன் கடலில் செல்லும் கப்பல்களிலும், மேகத்திலிருந்து அல்லாஹ் நீரை இறக்கியதன் மூலம் பூமியை அதன் இறப்பிற்குப் பின்னர் உயிர்ப்பித்து, அதில் எல்லா வகையான உயிரினங்களையும் பரவச் செய்வதிலும், காற்றுகளை இங்குமங்குமாக வீசச் செய்ததிலும், விண்ணிற்கும்

மண்ணிற்குமிடையில் பணிபுரிய ஏவப்பெற்ற மேகங்களிலும் நிச்சயமாக சிந்திக்கும் மக்களுக்குப் பல அடையாளங்கள் உள்ளன. (2:165)

இந்த வசனத்தில் அல்லாஹ் மனிதனின் மீது தான் செய்துள்ள அருட்கொடைகளுள் சிலவற்றை எடுத்துரைத்துள்ளான். உங்களுக்கு சற்று அறிவு இருந்தால் என்னை விட்டு வேறு ஒரு கடவுளை ஒருபோதும் தேடமாட்டீர்கள். மாறாக, இறைவனின் ஒவ்வொரு பொருளிலிருந்தும் நீங்கள் பயனடைந்து கொண்டிருக்கிறீர்கள். இவை உங்களை இறைவன் பக்கம் குனிபவர்களாக ஆக்க வேண்டும்.

இந்த வசனத்திற்கு முந்தைய வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான்.

அதன் பொருள்: வணக்கத்திற்குரிய உங்கள் இறைவன் ஒரே இறைவனாவான். அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமான அவனையன்றி வேறெந்த இறைவனும் இல்லை.

அந்த இறைவனிடம் மனிதன் வேண்டினாலும் வேண்டாவிட்டாலும் தனது அருளை பொழிபவன் ஆவான். மனிதன் நன்றி உணர்வுடன் அந்த அருட்கொடைகளை பயன்படுத்துகின்ற போது இன்னும் அதிகமான இறை அருளுக்கு மனிதன் வாரிசாகிக் கொண்டே செல்கிறான்.

இந்த வசனத்தில் அல்லாஹ் தனது ரஹ்மானிய்யத்தின் வெளிப்பாட்டின் சில காட்சிகளை நினைவு கூர்ந்துள்ளான். வானங்கள் மற்றும் பூமியின் படைப்பு எனது அருட்கொடைகளுள் ஒரு அருட்கொடை ஆகும் என்று கூறுகிறான். இது யாதொரு பலனும் இன்றி வெறுமனே படைக்கப்பட்டதில்லை. மாறாக, வானம், பூமி, நட்சத்திரங்கள், கோளங்கள், தண்ணீர், காற்று இவை அனைத்தும் மனிதனின் பயனுக்காகவே படைக்கப்பட்டுள்ளது.

இரவும், பகலும் மாறி மாறி வருவது, 24 மணி நேரத்தில் பல்வேறு நேரங்களில் மனிதன் நலனுக்காக இது மாறி மாறி வருகிறது. ஓய்வு எடுப்பதற்கும் வேலை செய்வதற்கும் இது மிகவும் அவசியமாகும். கடலால் மனிதனுக்கு பல நன்மைகள் இருக்கின்றன. அதில் கப்பல்கள செல்கிறது. பயணம் செய்வதற்கும், பொருள்களையும் சுமைகளையும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்கிறது. இன்றும் கூட அல்லாஹ்வின் இந்த அருட்கொடையை யாராலும் மறுக்க முடியாது. ஏனென்றால், பெரும்பாலான வணிகப் பொருட்கள் கப்பல்கள் மூலமாகவே ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது. பிறகு கடலின் மூலம் மனிதனுக்கு இருக்கின்ற இன்னொரு நன்மை, இதன் தண்ணீரை அல்லாஹ் மேகமாக கொண்டு வந்து மனிதனுக்கே பயனளிக்கின்றான். மனிதர்களுக்கும், விலங்கினங்களுக்கும் இந்த நீர் உணவிற்கான ஆதாரமாக அமைகிறது. தண்ணீர் இல்லையென்றால் உணவு கிடைக்காது. மழை சற்று குறைவாக பெய்தால் மிகப்பெரிய சர்ச்சை எழுகிறது. மிக நீண்ட காலம் மழை பெய்யாவிட்டால் பஞ்சம் ஏற்பட்டு விடுகிறது. அல்லாஹ் இந்த சூழ்நிலையை சூரத்துல் முல்க் –ல் இவ்வாறு விளக்குகிறான்.

பொருள்: நீர் கூறுவீராக. உங்களுடைய நீர் (வீழ்ச்சி பூமியின் ஆழத்தில்) மறைந்து போய் விட்டால், பின்னர் பாய்ந்தோடும் (தூய்மையான) தண்ணீரை உங்களுக்குக் கொண்டு வருபவன் எவன்? என்பதை நீங்கள் எனக்குக் கூறுங்கள். (67:31)

இறைவனின் நீர் வானத்திலிருந்து பொழிந்தால் தான் நிலத்தின் நீர் மனிதனுக்கு பயன் தருகிறது. விலங்கினங்கள் இருப்பதிலும் மனித வாழ்வின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தாவரங்களின் மீது ஏற்படுகிறது. விவசாயிகள் இதை நன்கு அறிவர். அதாவது காற்று வீசுவது கூட தாவரங்களுக்கு நல்ல விளைச்சலை தருகிறது. இந்தத் திசையிலிருந்து காற்று வீசினால் இந்த பயிர் நன்றாக விளையும். குளிர்ந்த காற்று ஒரு பக்கம் பயிர்களுக்கு நல்ல விளைச்சலை தருகிறது. மறுபக்கம் பயிர்களுக்கு இழப்பை ஏற்படுத்துகிறது. இவ்வனைத்தையும் அல்லாஹ் படைத்து இவையெல்லாம் திடீரென்று தோன்றியது அல்ல. மாறாக, எனது இருப்பை இவை நிரூபிக்கின்றன. எனவே வானம், பூமி ஆகியவற்றின் படைப்பு இரவு பகல் மாறி மாறி வருதல், சீதோஷண நிலையின் மாற்றம், இவ்வனைத்தையும் பற்றி சிந்தித்து மனிதனுக்கு இறை இருப்பின் மீது நம்பிக்கை ஏற்படுகிறது. அல்லாஹ் இதைப் படைத்து விட்டு நான் இதை படைத்தது மட்டுமின்றி இதை கண்காணிக்கவும் செய்கிறேன் என்று அல்லாஹ் பிரகடனம் செய்கிறான்.

ரஹ்மானிய்யத் என்ற பண்பின் மூலம் மனித குலத்திற்கு கருணை காட்டுவதோடு ரஹீமிய்யத் என்ற பண்பின் மூலம் அசாதாரணமான அடையாளங்களையும் காட்டுகிறேன். ஒருமுறை மக்காவில் ஏழு வருடங்கள் பஞ்சம் ஏற்பட்டது. மிக நீண்ட காலம் மிகவும் வறுமையும் பஞ்சமும் நிலவியது. மக்கள் தோலையும் எலும்புகளையும் உண்ணும் அளவிற்கு நிலைமை மோசமடைந்தது. அப்போது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் மக்காவின் தலைவர்கள் வந்து இந்த நிலை மாறுவதற்கு துஆ செய்ய வேண்டினார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் பண்புகளை மிக அதிகமாக பிரதிபலிப்பவராக இருந்தார்கள். துஆ செய்தார்கள். அதன் விளைவாக பஞ்சம் விலகியது. மக்களுக்கு உணவு கிடைத்தது.

ஒருமுறை மதீனாவின் மக்கள் மழைக்காக துஆ செய்யுமாறு கேட்டுக் கொண்டார்கள். அப்போது திடீரென்று மேகம் வெளிப்பட்டது. மழை பொழிய ஆரம்பித்தது. மழை பெய்து கொண்டேயிருந்தது. அடுத்த வாரம் சஹாபாக்கள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் மழையை நிறுத்துவதற்கு துஆ செய்யுமாறு வேண்டினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எங்கள் இறைவா இந்த மழையை எங்களுக்கு அருகிலுள்ள ஊர்களில் பொழியச் செய்வாயாக. எங்கள் மீது பொழியச் செய்யாதிருப்பாயாக என்று துஆ செய்தார்கள். வல்லமைமிக்க இறைவன் இந்த துஆவை உடனே ஏற்றுக் கொண்டான். மழை நின்று விட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தில் மிகவும் பயன்தரக்கூடிய நபர்களையும் அல்லாஹ் படைத்திருக்கிறான். அவர்களின் காரணமாக இறைவன் தனது இறைத்தன்மைக்கு அத்தாட்சி வழங்கியவாறு மக்களின் நன்மைக்கான பலனுக்கான ஏற்பாட்டை செய்துள்ளான். இக்காலக்கட்டத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாழ்க்கை இவ்வாறான பல சம்பவங்களால் நிரம்பியுள்ளதை நாம் பார்க்கிறோம். அவர்களது துஆவால் மக்களுக்கு அதிக நன்மை கிடைத்தது.

நான் படைத்த பொருட்களை உங்களுக்கு தொண்டாற்ற வைத்துள்ளேன். இதைப் பார்த்து உங்கள் ஈமானில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்று அல்லாஹ் கூறுகிறான். வெளிப்படையான மற்றும் பௌதீக உதாரணங்களை வைத்து ஆன்மிக விஷயங்களை அல்லாஹ் விளக்குகிறான். ஆன்மீக அமைப்பு இதை விட மிகவும் பெரியதாகும். பௌதீக பொருட்களின் பலனும் நஷ்டமும் இவ்வுலகில் முடிந்து விடுகிறது. ஆனால், ஆன்மீக பலன்கள் மறு உலகில் மனிதனுக்கு பயன்தரக்கூடியதாகும்.

எனவே, ஒரு மூஃமின் வானங்கள் மற்றும் பூமியின் படைப்பை பௌதீகப் பொருட்களை ஈட்டுவதற்கான வழியாக கருதுவதில்லை. மாறாக, இதைப்பற்றி நன்றாக சிந்தித்து இறைவனின் ஒருமைத்துவம் மற்றும் அவனது இருப்பின் மீது இறுதி நாள் பற்றிய உறுதியான நம்பிக்கையும் இன்னும் உயர்கிறது. இரவும் பகலும் மனிதனுக்கு வெளிப்படையாக எவ்வளவு பயனைத் தருகின்றது! அவ்வாறே இரவு மற்றும் பகலின் உதாரணத்தைக் கூறி ஆன்மீக ரீதியான இருளுக்குப் பின் ஒளிக்கான ஏற்பாட்டை இறைவன் செய்வதாகக் கூறுகிறான். இதன் மூலம் ஆன்மீக இருள் அகன்று விடுகிறது. இறைவன் தனது மலக்குகள் மற்றும் நபிமார்களின் மூலம் இந்த ஆன்மீக இருளைப் போக்குவதற்கான ஏற்பாட்டை செய்கிறான்.

எந்த காலகட்டத்திலும் இந்த ஒளியை அல்லாஹ் மனிதனின் மீது இறக்காமல் இருந்ததில்லை. எல்லா காலகட்டத்திலும் அல்லாஹ் ஒளியை அனுப்பி வந்துள்ளான். இக்காலகட்டத்திலும் அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மூலம் தனது ஒளியை இறக்கியுள்ளான். இதன் மூலம் இஸ்லாத்தின் ஒளியை மீண்டும் புதுப்பித்துள்ளான். பௌதீக ரீதியில் கப்பல்கள் மூலம் மிகவும் பாதுகாப்பான முறையில் சுமைகளை இடம் மாற்றுவதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றான். அவ்வாறே ஆன்மீக ரீதியில் அல்லாஹ் ஆன்மீக கப்பல்களை கட்டுகின்ற தனது நல்லடியார்களை உலகிற்கு அனுப்புகின்றான். இந்த ஆன்மீக கப்பலில் ஏறுகின்ற இறை நல்லடியார்களை அது இறை திருப்தியின் எல்லை வரை கொண்டு செல்கிறது. இவ்வுலக மற்றும் மறு உலக நன்மைகள் அவர்களுக்கு கிடைக்கிறது.

இறைவன் தனது நல்லடியார்களின் மீது காட்டுகின்ற இந்த கருணையை ஒருபோதும் எந்த காலத்திலும் நிறுத்துவதில்லை. மறு உலகிலும் அல்லாஹ் தனது கருணையை நிறுத்துவதில்லை.

எப்போதெல்லாம் இறைவன் **ழுஹரல் ஃபஸாது ஃபில் பர்ரி வல் பஹ்ர்** - கடலும் கரையும் கெட்டுக் கிடக்கின்றதைப் பார்க்கின்றானோ உலகம் குழப்பத்தில் மூழ்கி விடுவதை பார்க்கும் போதெல்லாம் வரம்பு மீறுகின்ற போதெல்லாம் தனது நல்லடியார்களை காப்பாற்றுவதற்காக தன் புறமிருந்து மனிதர்களை தேர்ந்தெடுத்து உலகிற்கு அனுப்புகின்றான். அவர்கள் (ஆன்மீக) கப்பலைக் கட்டுகிறார்கள். அந்தக் கப்பல் மிகவும் பாதுகாப்பான முறையில் புயல் வெள்ளத்திலிருந்து அவர்களை ஏற்றுக் கொண்டவர்களை காப்பாற்றுகிறது.

இன்று இந்த (ஆன்மீக) கப்பலை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தான் உருவாக்கினார்கள். இந்த கப்பலில் ஏறுவதற்கான எல்லா உரிமையையும் பேணுகின்றவர்கள் அல்லது பேணுவதற்கான முயற்சியை செய்பவர்கள்தான் இதில் உண்மையிலேயே ஏறியவர்களாக கருதப்படுவார்கள். இதற்கான உரிமைகளை எப்படி நிறைவேற்றுவது? என்று போதிப்பதற்காக **கிஷ்தி நூஹ்** என்ற பெயரில் ஒரு நூலை எழுதினார்கள். அவர்களது காலகட்டத்தில் பிளேக் நோய் பரவியபோது அதிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கான வழிகளை அதில் எழுதியுள்ளார்கள்.

**இந்த நூலில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்:**

பிளேக் நோய் தாக்குவதிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு என்ன போதனையை முழுமையாக பின்பற்றுவது என்று கேட்டால் நான் சுருக்கமாக சில வரிகளை கீழே தருகிறேன். இதை எழுதி விட்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தஃலிம் (போதனை) என்ற பெயரில் விளக்கமாக எழுதியுள்ளார்கள். அதில் நம்மை எச்சரித்தவாறு இவ்வாறு கூறுகிறார்கள். வெறும் நாவினால் பைஅத் செய்து விட்டோம் என்று கூறுவதில் எந்த பயனும் இல்லை. உள்ளத்தால் அதை செயல்படுத்த வேண்டும். அதாவது, அதில் செயல்பட வேண்டும் என்று உள்ளத்தில் உறுதி கொள்ள வேண்டும். நாம் வெளிப்படையாக பைஅத் செய்து விட்டோம் என்று நினைக்காதீர்கள். வெளிப்படையில் ஒரு பயனும் இல்லை. இறைவன் உங்கள் உள்ளத்தைப் பார்க்கிறான். அதன் அடிப்படையில் உங்களோடு நடந்து கொள்வான். நீங்கள் இறைவனின் இறுதியான ஜமாஅத் ஆவீர்கள். எனவே தகுதியால் தலைசிறந்த செயல்களை காட்டுங்கள்.

நான் மிகவும் சுருக்கமாக இதை உங்களுக்கு கூறியுள்ளேன். இந்த நூலில் கூறப்பட்டுள்ள போதனைகளைப் பின்பற்றி ஒரு மனிதன் ஒரு மூஃமின் ஒரு அஹ்மதி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உருவாக்கிய கப்பலில் ஏறி தன்னைப் பாதுகாத்துக் கொள்ளலாம். அல்லாஹ் நமது வாழ்க்கையை இந்த போதனைகளுக்கு ஏற்ப அமைத்துக் கொள்ள நல்வாய்ப்புகளை வழங்குவானாக. இதன் மூலம் நாம் இறைவனால் அனுப்பப்பட்ட இக்காலத்தின் இமாமின் போதனைகளிலிருந்து பயன் பெறுபவர்கள் ஆகலாம். இன்றும் உலகம் குழப்பத்தில் மூழ்கியுள்ளது. புதுப்புது நோய்கள் உருவாகின்றன. இப்போது ஒரு புதிய நோய் உருவாகியுள்ளது. அதை Swine flue (பன்றிக் காய்ச்சல்) என்று கூறுகிறார்கள். இவ்வனைத்தும் நம்மை கவலைப்பட வைக்கின்றது. சிந்திக்க வைக்கின்றது. நமது நிலையை ஆராய்ந்தவாறு அல்லாஹ் அவனது ரஸூல் (ஸல்) மற்றும் அவனால் அனுப்பப்பட்ட காலத்தின் இமாமின் போதனைகளின்படி செயல்படுபவர்களாகவும் முயற்சி செய்பவர்களாகவும் ஆக்க வேண்டும். நாம் சிறப்பான கவனத்தோடு முயற்சி செய்தோம் என்றால் ஆன்மீக நீரிலிருந்து நாம் பலன் பெறுபவர்கள் ஆவோம்.

இதைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான். **ஃப அஹ்யா பிஹில் அர்ழ பஃத மவ்திஹா** - பூமி அது இறந்ததன் பின்னர் உயிர்ப்பிக்கிறான். (2:165, 16:66, 45:6)

பௌதீக உலகில் மழையின் மூலம் பூமி செழிப்படைவதைப் போன்று அல்லாஹ் தனது நபிமார்களின் மூலம் பொழியச் செய்கின்ற ஆன்மீக மழையின் மூலம் புத்துயிர் பிறக்கிறது. ஆனால் இந்த நீரிலிருந்து நல்ல நிலத்தைப் போன்று பயன்தரக்கூடிய திறன் உள்ளவர்கள்தான் பயன் தருவார்கள்.

ஆன்மீக செழிப்பிற்காக தன்னுடைய பொதுவான கருணையைக் கொண்டு மழையை இறக்குகின்றான். ஆனால் அதை ஈர்த்து அதிலிருந்து பயன் பெறுவதற்காக உள்ளம் செழிப்பாக இருப்பது அவசியமாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இதற்காக ஒரு உதாரணத்தைக் கூறியுள்ளார்கள்.

உலகில் மூன்று வகையான மக்கள் உள்ளனர். ஒரு வகை மக்கள் நல்ல வளமான நிலத்தைப் போன்றவர்கள். அந்த நிலம் மிகவும் மிருதுவாகவும் அதனுள் தண்ணீரை ஈர்ப்பதற்கான திறனும் இருக்கும். இவ்வாறான நிலம் தானும் பலன் பெற்று செழிப்பான வயலையும் வளரச் செய்கிறது. தண்ணீரை உறிஞ்சி செழிப்பான விளைச்சலை தருகிறது. இவ்வாறான நிலத்தின் மீது மழை பொழிகின்ற போது அது மழை நீரை உறிஞ்சுகிறது. தானும் பயனடைந்து விளைச்சலையும் கொடுக்கிறது. இதனால் பிறருக்கு உணவை வழங்கி பயன் தருகிறது. இரண்டாவது வகையான நிலம் கடினமானதாகும். இது தண்ணீரை உறிஞ்சுவதில்லை. ஆனால் தண்ணீரை அது தன் மீது தேக்கி வைத்துக் கொள்கிறது. உதாரணமாக, குளம் குட்டைகள். அந்த தண்ணீரால் நேரடியாக அந்த நிலம் பயனடைவதில்லை. ஆனால் அதில் தேங்குகின்ற தண்ணீரை கால்நடைகளும் விலங்குகளும் பயன்படுத்துகின்றன. மனிதன் அதைக் குடிப்பதற்கு பயன்படுத்துகிறான். விவசாயத்திற்கும் அந்த நீர் பயன்படுகிறது. பிறகு மூன்றாவது வகை நிலம் மிகவும் கடினமான பாறைகள் அடங்கியது. அது சரிவாகவும் இருக்கிறது. அதிலிருந்து நீர் ஓடி விடும். அது தண்ணீரை உறிஞ்சுவதும் இல்லை. அதில் நீர் தேங்குவதும் இல்லை. இவ்வாறான நிலம் தண்ணீரை தானும் பயன்படுத்தாமல் தேக்கி வைத்து பிறருக்கும் பயன்படுவதில்லை.

**ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

முதல் வகை நிலத்தின் உதாரணம், ஒரு ஆலிமைப் போன்றதாகும். அவர் தானும் அறிவைக் கற்றுக் கொள்கின்றார். பிறருக்கும் தான் கற்றுக் கொண்ட அறிவைக் கொண்டு பயன் தருகிறார். மூன்றாவது வகை நிலம் தானும் பயன் அடைவதில்லை. பிறருக்கும் பயன் தருவதில்லை. அதாவது, ஆன்மீக நீரை தானும் பயன்படுத்துவதில்லை. அதை தேக்கி வைத்து பிறருக்கும் பயன் தருவதில்லை. இரண்டாவது வகை நிலத்தின் உதாரணத்தை ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் விளக்கவில்லை. எனினும் அதில் தண்ணீர் தேங்குகின்ற உதாரணத்தை கூறி புரிய வைத்துள்ளார்கள். மார்க்கத்தையும் அறிவையும் கற்றுக் கொண்டு தான் அதன்படி செயல்படுவதில்லை. ஆனால் பிறருக்கு தான் கற்ற அறிவைக் கற்றுக் கொடுக்கிறார்கள். அவர் கற்றுக் கொடுப்பதால் சில நல்ல உள்ளம் கொண்டவர்கள் அதன்படி செயலாற்ற ஆரம்பித்து விடுகிறார்கள்.

அல்லாஹ் தன் நபிமார்களை அனுப்புகின்றபோது இதே மூன்று வகை மனிதர்கள் முன்னால் வருகிறார்கள். எனவே ஒரு உண்மையான மூஃமின் முதல் வகையில் தன்னை இணைத்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். தானும் பயனடைந்து பிறருக்கும் பயன் தருவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். தனது சுற்றுப்புறத்திலும் சமூகத்திலும் மனித இனத்திற்கு பயன் தருகின்ற வகையில் உருவாக வேண்டும். அப்போதுதான் நாம் நாஃபிஃ (பயன் தருபவன்) ஆகிய இறைவனிடமிருந்து சரியான முறையில் பயன் பெறுபவர்களாக இருப்போம்.

பிறகு அல்லாஹ் கூறுகிறான்: **வபஸ்ஸ ஃபீஹா மின் குல்லி தாப்பா** – அதில் எல்லா வகையான உயிரினங்களைப் பரவச் செய்வதிலும்.....

ஆக, உயிரினங்களைப் பரப்புவதும் கூட இறைவனின் அருட்களுள் ஒரு அருளாகும். இதற்கு அல்லாஹ் திருக்குர்ஆனில் பல இடங்களில் கூறுகிறான்:

**வல் அன்ஆமு கல்கஹா லகும் ஃபீஹா திஃப்உவ் வமனாஃபிவு வமின்ஹா தஃகுலூன்** – கால்நடைகளையும் அவன் படைத்தான். அவற்றில் உங்களுக்கு வெப்பம் தரும் பொருளும், (மற்றும்) பல பலன்களும் உள்ளன. மேலும் அவற்றி(ன் இறைச்சியி)லிருந்தும் நீங்கள் உண்கின்றீர்கள். (16:6)

மனிதன் கால்நடைகளிலிருந்து பலன் பெறுகிறான். அதன் இறைச்சி, தோல், எலும்புகள் கூட பலன் தருகின்றது. இது செல்வத்தை சம்பாதிக்கும் ஒரு வழியும் ஆகும். கால்நடைகளை வைத்து மக்கள் வியாபாரம் செய்கிறார்கள்.

நான் முதலில் ஓதிய வசனம் சூரா பக்கராவின் வசனமாகும். அதைத்தான் நான் இப்போது விளக்கி வருகிறேன். அதில் தாப்பா என்ற சொல் வருகிறது. இங்கு அன்ஆம் என்ற சொல் வந்துள்ளது.

கால்நடைகளுக்கு அன்ஆம் என்று கூறுவார்கள். ஆனால் திருக்குர்ஆனில் எல்லா வகையான விலங்குகளுக்கும் உயிரினங்களுக்கும் தாப்பா என்ற சொல் வந்துள்ளது. எனவே தாப்பா என்பதன் பொருள் எல்லா வகையான விலங்குகளும் ஆகும்.

அல்லாஹ் ஓரிடத்தில் கூறுகிறான்: **வலவ் யுஆஹிதுல்லாஹுன்னாஸ பி ளுல்மிஹிம் லா தரக்க அலைஹா மின் தாப்பா** - அநீதியிழைத்ததற்காக, அல்லாஹ் அவர்களுக்கு (திருந்த வாய்ப்பளிக்காமல்) தண்டனையளிப்பதற்காக இருந்தால், அவன் இதில் (பூமியில்) எந்த உயிரனத்தையும் விட்டு வைத்திருக்க மாட்டான். (16:62) இறைவன் தவறுகளுக்கு உடனடியாக தண்டனை கொடுக்க விரும்பவில்லை. எனவே பயன்தரக்கூடிய எல்லா வகையான விலங்குகளையும் பூமியில் விட்டு வைத்திருக்கிறான். இதில் சின்ன விலங்கினங்களும் பெரிய விலங்குகளும் அடங்கும். அல்லாஹ் பூமி மரணித்த பிறகு அதற்கு உயிர் கொடுத்து எல்லா வகையான விலங்குகளையும் பரப்பி விடுவதன் உதாரணத்தை கூறி இவ்வுலகில் விலங்குகள் வாழ்வது மிகவும் அவசியம் என்று கூறுகிறான்.

ஏனென்றால், மனிதனை அழிக்க வேண்டும் என்றால் பிற விலங்குகளை அழித்து விட்டால் மனித இனம் தானாகவே அழிந்து விடும். இவ்வாறே ஆன்மீக உலகிலும் தாப்பா இருக்கின்றது. ஆன்மீக நீரின் மூலம் பலன் பெற்று பூமிக்கு புத்துயிர் கொடுக்கின்ற மூஃமின்கள் தான் தாப்பா ஆவர். முழு உலகில் பரவி அல்லாஹ்வின் தூதுச் செய்தியை எட்ட வைக்கின்றனர்.

இறைவனின் ஜமாஅத்திற்கு இது ஒரு முக்கியமான பொறுப்பாகும். இறை செய்தியை அதிகமாக உலகில் பரப்பி உலகிற்கு புத்துயிர் அளிக்க வேண்டும். பிறகு காற்று வீசுவது பற்றி கூறுகிறான். அதாவது காற்றை மூஃமின்களின் நன்மைக்காக தொண்டாற்ற வைத்துள்ளான். ஆன்மீக உலகிலும் இவ்வாறே நடக்கிறது. ஆன்மீக ரீதியில் வீசுகின்ற காற்று மூஃமின்களுக்கு பலன் கிடைக்கிறது. அல்லாஹ் தனது அருளின் காற்றை ஆன்மீக ரீதியாக வீசச் செய்கிறான். இந்த காற்றின் மூலம் தனது ஜமாஅத்திற்கு உதவுகிறான். எதிர்ப்பின் புயல் வீசுகிறபோது அதன் தீங்கிலிருந்து காப்பாற்றுகிறான். ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் வரலாற்றை பாருங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்திலிருந்தே இன்று வரை இறைவன் தன் அருளால் எதிர்ப்பு அலையை தடுத்து வருகிறான். ஜமாஅத்திற்கு ஆதரவாக வீசுகின்ற காற்றை அல்லாஹ் வீசச் செய்கிறான். அவ்வாறு வீசுகின்ற காற்று நல்ல உள்ளம் கொண்டவர்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மையின் பக்கம் ஈர்க்கிறது. தினந்தோறும் எனக்கு வருகின்ற கடிதத்தில் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி என்ற குளிர்காற்று தமக்கு கிடைத்ததாக எழுதுகிறார்கள். இதை நான் பல முறை கூறியிருக்கிறேன். அரபு நாட்டு மக்கள் குறிப்பாக, ஒன்று அரபி மொழியின் செறிவு காரணமாகவும் இரண்டாவது அவர்களின் இயல்பின் காரணமாகவும் அவர்கள் எவ்வாறு ஜமாஅத்திற்கு வந்தார்கள். அல்லாஹ் எவ்வாறு அவர்களுக்கு நேர்வழியை காட்டினான் என்று விளக்கும் போது அவர்கள் குளிர்ந்த காற்றை உதாரணமாக கூறுகின்றனர். இதுவே இறைவனின் பணியாகும். மழையையும், காற்றையும் முஃமின்களுக்கு ஆதரவாக அனுப்புகிறான். இதுவே நமது பயன் தருகின்ற இறைவன் ஆவான். எப்போதும் பயன் தருகின்றான்.

ரப்புல் ஆலமீனாக இருக்கின்ற இறைவன் தனது ஆன்மீக பலனை அளிப்பதற்காக தனது ரஸூலை அனுப்பியுள்ளான். அவர்களது ஜமாஅத்தில் நாம் இணைந்துள்ளோம். நமது எதிரிகள் துவக்கத்தில் மிக கடினமாக நமது பாதையை தடுக்கவும் எதிர்ப்பை எல்லை மீறி காட்டுவதற்கு முயற்சி செய்தார்கள். அதற்கு பதிலாக நாம் பயனடைந்தவாறு அவர்களுக்கு ஆன்மீக கனிகளையும் நன்மைகளையும் செய்வதற்கு முயற்சி செய்தோம். அதிலிருந்து அவர்கள் பயனடைய வேண்டும் என்பதற்காக இதை செய்தோம். இன்னும் அவர்கள் பயனடைந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் செய்த துஆவை முன்பும் நாம் செய்து வந்தோம். இப்போதும் செய்கிறோம்.

**அல்லாஹும்ம ஹ்தி கவ்மி ஃப இன்னஹும் லா யஃலமூன்** - இறைவன் இந்த மக்களுக்கு நேர்வழி கிடைப்பதற்கு வழிவகுப்பானாக. ஏனெனில் இவர்கள் அறியாதவர்கள்.

ஆனால் இந்த எதிரிகள் இப்போது வேறு வழிமுறையை கையாழுகிறார்கள். எதிர்ப்பில் முன்னர் குறை இருந்தது. இப்போது அதை முழுமைப்படுத்தி விட்டார்கள். மேலும் இவர்கள் காதியானிகளே! நீங்கள் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களை விட்டு விலகி எங்கள் பக்கம் வந்து விடுங்கள். அவ்வாறு வந்து விட்டால் நாங்கள் உங்களை ஆதரிப்போம் என்று கூறகின்றார்கள்.

இவர்கள் கூறுவதன்படி பயனளிக்கின்ற இறைவனால் அனுப்பப்பட்டவரை விட்டு விட்டு குழப்பமும் அழிவையும் தவிர வேறு எதுவும் இல்லாத எங்களிடம் வந்து சேர்ந்து விடுங்கள் என்று இவர்கள் கூறுகின்றார்கள். ஒரு பக்கம் தங்களை உம்மத் என்று கூறுகிறார்கள். மறு பக்கம் உம்மத்தைச் சேர்ந்தவர்களது கழுத்துகள் வெட்டப்படுகின்றன.

நமக்கு இறைவன் நேர்வழி கொடுத்தது மட்டுமல்லாமல் திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான். நீங்கள் எங்களிடம் இருக்கிற நேர்வழி தான் உண்மையில் நேர்வழியாகும் என்று கூறுங்கள். உங்களிடம் நேர்வழி இல்லை என்று கூறுங்கள் என கூறுகிறான். எனவே நீங்களும் குழப்பத்திலிருந்து தப்பித்திருக்க விரும்பினால் காலத்தின் மஸீஹின் ஜமாஅத்தில் இணையுங்கள். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்.

நீர் (அவர்களிடம்) கூறுவீராக: அல்லாஹ்வையன்றி எங்களுக்கு நன்மையோ, தீமையோ செய்ய இயலாதவற்றை நாங்கள் அழைக்க வேண்டுமா? மேலும் எங்களுக்கு அல்லாஹ் நேர்வழியினைக் காட்டிய பின்னர், தீயவர்களால் கவரப்பட்டு மனங்குழம்பிய படி பூமியில் தடுமாறியவனைப் போல் நாங்கள் குதிகால்களில் திருப்பிவிடப்பட வேண்டுமா? நேர்வழியினைப் பெற எங்களிடம் வாருங்கள் என்று அவனை அழைக்கும் நண்பர்கள் அவனுக்கு உள்ளனர். (நிராகரிப்பவர்களாகிய அவர்களிடம்) நீர் கூறுவீராக. நிச்சயமாக அல்லாஹ்வின் வழியே (உண்மையான) நேர்வழி எல்லா உலகங்களின் இறைவனுக்கு நாங்கள் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்று எங்களுக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் **குல் இன்ன ஹுதல்லாஹி ஹுவல் ஹுதா** என்ற பகுதிக்கு விளக்கம் எழுதுகின்றார்கள். நீர் கூறுவீராக. உங்களது கற்பனைகள் எல்லாம் ஒன்றுமேயில்லை. நேர்வழி என்பது இறைவனே சுயமாக நல்குவதுதான் நேர்வழி ஆகும். இல்லையென்றால் மனிதன் தனது தவறான கற்பனையால் இறை வேதத்தின் பொருளை தவறாக வழங்குகிறான். இறைவன் தான் தவறிழைப்பதில்லை. எனவே, அவன் வழங்குவதுதான் நேர்வழி ஆகும். மனிதனின் கற்பனை நம்பத்தகுந்தது அல்ல. இதுவே இஸ்லாத்தின் போதனை ஆகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மை இதன் பக்கம் தான் கவனமூட்டியுள்ளார்கள். இறைவன் வழங்கியுள்ள இந்த நேர்வழியை விட்டு விட்டு நான் இந்த மக்களைப் பின்பற்றி செல்வதா? இந்த மக்களோ இன்று வரை திருக்குர்ஆனின் நாஸிக் மன்ஸுக் (ரத்து செய்கின்ற வசனம், ரத்து செய்யப்பட்ட வசனம்) உண்டு என்ற குழப்பத்தில் மூழ்கியுள்ளனர். முதலில் இவர்கள் 14 ஆம் நூற்றாண்டை எதிர்பார்த்திருந்தார்கள். மஹ்தி, மஸீஹ் வந்து விடுவார் என்று கூறினார்கள். இப்போது நூற்றாண்டு முடிந்து மிகவும் நீண்ட நாட்கள் கடந்து விட்டன. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பை நிராகரித்து விட்டனர். ஒரே வேத நூலையும், ஒரே ரஸூலையும் ஏற்றுக் கொண்டுள்ளபோதிலும் ஒருவருக்கெதிராக ஒருவர் குஃப்ர் ஃபத்வா வழங்கி வருகின்றனர்.

நாம் அல்லாஹ்வைப் பற்றிய அறிவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடமிருந்து பெற்றோம். அந்த இறைவன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை இறுதி ஷரீஅத் கொண்டு வந்த நபியாக ஆக்கி அனுப்பினான். அந்த நபியின் மீது திருக்குர்ஆன் என்ற மிகவும் கண்ணியத்திற்குரிய நூலை இறக்கினான். அந்த குர்ஆன் எல்லா நேர்வழியையும் காட்டுகின்ற ஊற்று ஆகும். இந்த சிந்தனையை நமக்கு இக்காலத்தின் இமாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்தான் வழங்கினார்கள். நமது இறைவன் நமக்கு பலன் தருவதற்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இரண்டாவது வருகையை நிறைவேற்றியுள்ள போது நாம் எதற்காக அவனை விட்டு விட்டு வேறு ஒரு இறைவனை நம்ப வேண்டும்? இன்று நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாதங்களின் மீது சந்தேகம் கொண்டால் பிறகு

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஆதரவாக வானங்களிலும் பூமியிலும் வெளிப்பட்ட அடையாளங்களை என்னவென்று கூறுவது? இந்த அடையாளங்களை அல்லாஹ் இன்றும் தமது வாக்குறுதிக்கேற்ப வெளிப்படுத்துகின்றான். இது மனிதனின் பணியாக இருந்தால், அஹ்மதிய்யத்தை முற்றிலும் அழிப்பதற்காக மனிதனால் முடிந்த எல்லா முயற்சிகளையும் செய்த பின்னரும் அல்லாஹ் அஹ்மதிகளுக்கு முன்னேற்றத்தையே வழங்கிக் கொண்டிருக்கின்றான். அது மட்டுமல்ல. எதிரிகள் எப்போதும் நஷ்டமடைந்து கொண்டிருப்பதையே நாம் எப்போதும் பார்த்து வருகிறோம். அவர்களது (அவல) நிலையைக் கண்டு நமது ஈமான் அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட நபியான ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை நேசரின் மீது இன்னும் உறுதி ஆகிக் கொண்டே செல்கிறது.

நீங்கள் எங்களை அழைத்தது இருக்கட்டும். இப்போது நாங்கள் உங்களை அழைக்கிறோம். வாருங்கள் மஸீஹ் மற்றும் மஹ்தியின் ஜமாஅத்தில் இணையுங்கள். இதில்தான் உங்களுக்கு வாழ்வு இருக்கிறது. அல்லாஹ் இவர்களுக்கு இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

இறுதியில் நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை வாசிக்க விரும்புகிறேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மஜ்லிஸில் ஃபல்ஜி ஸாகிம் தீன் என்பவரைப் பற்றி பேசப்பட்டது. அவர் ஈஜாஸுல் மஸீஹ் என்ற நூலுக்கு பதில் எழுத முயற்சி செய்தார். அதில் அவர் வெற்றி பெற முடியவில்லை. இறைவன் அவரை அழித்து விட்டான்.

இது குறித்து **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்** அந்த சபையில் கூறினார்கள்:

இறைவன் புறமிருந்து இது எவ்வளவு உன்னதமான அடையாளம்! (என்று பாருங்கள்). இந்த அடையாளம் நமக்கு ஆதரவாக வெளிப்பட்டுள்ளது.

**இறைவன் திருக்குர்ஆனில் கூறுகிறான்.**

**வ அம்மா மா யன்ஃபவுன்னாஸ ஃபயம்குஸு ஃபில் அர்ழ்** - பின்னர் நுரையானது, தூக்கி எறியப்படுவதினால் அழிந்து விடுகின்றது. மக்களுக்கு பயனளிக்கும் பொருள், பூமியில் நிலைத்திருக்கின்றது. (13:18)

இந்த ஜமாஅத் நமது எதிரிகள் கூறுவது போன்று இறைவன் புறமிருந்து ஏற்படுத்தப்பட்டது என்றால் ஃபவ்ஸி என்பவர் மக்களுக்கு நன்மை செய்வதற்காக ஆரம்பித்த பணியில் அல்லாஹ் அவருக்கு உதவி செய்திருக்க வேண்டும். ஆனால் அவர் இளமையிலேயே மரணமடைந்தது, இந்த இயக்கத்திற்கு எதிராக பேனாவை கையில் எடுப்பது மக்களுக்கு பலன் அளிப்பது அல்ல என்பதை தெளிவுபடுத்துகிறது. நமது எதிரிகள் குறைந்தபட்சம் அவரது நிய்யத் நல்ல நிய்யத்தான இல்லை என்பதை ஏற்றுக் கொண்டாக வேண்டும். இல்லையென்றால் இறைவன் அவருக்கு உதவி செய்யாதது ஏன்? அவர் எடுத்த வேலையை முழுமைப்படுத்த அவருக்கு ஏன் அவகாசம் கொடுக்கப்படவில்லை. எனக்கு இல்ஹாம் இறங்கியது.

**வ அம்மா மா யன்ஃபவுன்னாஸ ஃபயம்குஸு ஃபில் அர்ழி** - 30 வருடங்களுக்கு முன் நான் கடுமையான காய்ச்சலால் நோய்வாய்ப்பட்டேன். நிறைய கங்கை அள்ளி என் நெஞ்சில் போட்டது போன்று கடுமையான காய்ச்சலால் அவதிப்பட்டேன்.

அப்போது எனக்கு இல்ஹாம் இறங்கியது. **வஅம்மா மா யன்ஃபவுன்னாஸ ஃபயன்குஸு ஃபில் அர்ழி** (தத்கிரா பக்கம் 11)

இஸ்லாத்தின் சில கொடிய எதிரிகள் கூட நீண்ட ஆயுளைப் பெற்று வாழ்கிறார்களே? என்று சிலர் கேள்வி எழுப்புகின்றனர். இதற்கு என்ன காரணம்?

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

என்னைப் பொருத்தவரைக்கும் இதற்கு காரணம் என்னவென்றால், சில சமயம் இவர்கள் வாழ்வது கூட ஒரு வகையில் மிகவும் பயனுள்ளது தான். பாருங்கள். அபூஜஹில் பதர் போர் வரைக்கும் உயிரோடு இருந்தான். உண்மை என்னவென்றால் எதிரிகள் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் திருக்குர்ஆனின் 30 ஜுஸ்வுக்கள் எவ்வாறு இறங்கியிருக்கும்? ஆட்சேபனைகள் எழுந்து கொண்டே இருந்தன. ஆட்சேபனைகளின் காரணமாகவும் அல்லாஹ் சில நேரம் கட்டளைகளை இறக்கிக் கொண்டிருந்தான். பயன்தரக்கூடியவர்கள் என்று அல்லாஹ் யாரை நினைக்கின்றானோ அவர்களுக்கு நீண்ட ஆயுளை வழங்குகிறான். நமது எதிரிகள் உயிரோடு இருந்து எதிர்த்து வருகிறார்கள் என்றால் அவர்களின் வாழ்வால் நமக்கு பயன் ஏற்படுகிறது. திருக்குர்ஆனின் நுட்பமான ஞானங்களை அல்லாஹ் நமக்கு வழங்குகிறான். மெஹர் அலி என்பவர் எதிர்க்கவில்லை என்றால் நுஸுலே மஸீஹ் என்ற நூல் எப்படி எழுதப்பட்டிருக்கும்? இவ்வாறு பிற மார்க்கங்களும் உலகில் இருக்கின்றது. அவைகள் இருப்பதற்கும் இதுதான் காரணம். இஸ்லாத்தின் அழகும் சிறப்பும் இதன் மூலம் வெளிப்படுகிறது. மார்க்கங்கள் மத்தியில் ஒப்பீடு செய்யப்பட்டு இஸ்லாத்தின் சிறப்பும் அழகும் வெளிப்படும்.

அல்லாஹ்வின் நாஃபிஃ – பயனளிப்பவன் என்ற பண்பிலிருந்து நாம் பலன் பெறுவதற்கு நமக்கு நல்வாய்ப்பு வழங்குவானாக. பயனுள்ளவர்களாக நாம் ஆவதற்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலம் ஏற்பட்ட உள்ள ஆன்மீக புரட்சியில் நாமும் பங்கு வகிக்க நமக்கு வாய்ப்பு வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 01.05.2009

Translated by : **Maulavi S. ABDUL QADIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**